# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No. 127/2018.

## வழக்கு சாட்சி – அ.சா. 7.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பொன்ராமன். | ஜாதி | |
| தந்தை பெயர் | அழகர்சாமி. | தொழில் | கொத்தனார் வேலை. |
| கிராமம் | கோடாங்கிபட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் | | வயது | 47/2025. |
| மாவட்டம் | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 11.03.2025.

**(1வது எதிரி இறந்துவிட்டார். 2–வது எதிரி ஆஜர். 3 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக BNSS பிரிவு 355–ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது, கோடாங்கிபட்டியில் குடியிருந்துகொண்டு, கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 சென்றாயன் எனது உறவினர் ஆவார். எதிரிகளைத் தெரியும். ஆஜரிலுள்ள 2–வது எதிரி செல்வம் என்பவரைத் தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் அப்போது வெளியூரிலிருந்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியைப் பிறழ்சாட்சியாகப் பாவிக்கக்கோரி, அரசுத் தரப்பில் விடுத்த வேண்டுகோளை ஏற்று, அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது:–**

1–வது எதிரி பரமகுரு, 2–வது எதிரி செல்வம் ஆகியோர்களிடம், வாதி ரூ.3 லட்சம் வட்டிக்குக் கடன் வாங்கியதாகவும், வாதி வட்டிப் பணம் தராமல் கடந்த 27.09.2017–ம் தேதி காலை சுமார் 07.15 மணியைப்போல், வாதி

அவரது குடும்பத்துடன் வீட்டிலிருந்தபோது, எதிரிகள் சட்டவிரோதமாக ஒன்றுகூடி, வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, அதிக வட்டி கேட்டு வாதியையும் அவரது குடும்பத்தாரையும் தாக்கிக் காயப்படுத்தி, குற்றங்கருதி மிரட்டியதாகவும், அதைத் தான் நேரில் பார்த்ததாகவும், போலீசார் விசாரணையின்போது, சொல்லிவிட்டு, தற்போது, நான் எதிரிகளுக்குப் பயந்து உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

இல்லை.